யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

| சித்திரக்கலை | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

சித்திரக்கலை I - 100 புள்ளிகள்
சித்திரக்கலை II - 100 புள்ளிகள்
சித்திரக்கலை III - 100 புள்ளிகள்

இறுதிப் புள்ளி = $100 + 100 + 100 = 300$

$300 \div 3$

= $100$ புள்ளிகள்

சித்திரக்கலை I - பகுதி - I = $40$ புள்ளிகள்
பகுதி - II = $20 \times 3 = 60$ புள்ளிகள்

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | **3** | 11) | **5** | 21) | **4** | 31) | **4** |
| 02) | **2** | 12) | **5** | 22) | **4** | 32) | **3** |
| 03) | **2** | 13) | **1** | 23) | **2** | 33) | **1** |
| 04) | **2** | 14) | **2** | 24) | **2** | 34) | **2** |
| 05) | **1** | 15) | **5** | 25) | **2** | 35) | **5** |
| 06) | **3** | 16) | **2** | 26) | **4** | 36) | **3** |
| 07) | **3** | 17) | **5** | 27) | **2** | 37) | **2** |
| 08) | **4** | 18) | **4** | 28) | **1** | 38) | **4** |
| 09) | **4** | 19) | **4** | 29) | **1** | 39) | **4** |
| 10) | **3** | 20) | **3** | 30) | **3** | 40) | **3** |

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

### பகுதி - II
#### உப பகுதி ‘அ’

**01)**

(i)
- ✶ முப்பரிமான வர்ணந்தீட்டும்முறை
- ✶ வர்ணங்கள் அதிகம் பாவிக்கப்பட்டுள்ளது.
- ✶ சத்தத்துடன் முறிந்த தடித்த மெல்லிய ரேகை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ ஈரச்சதை மரபில் வரையப்பட்டுள்ளது.
- ✶ பெண் உருவங்கள் காவியச் சிறப்புடன் வரையப்பட்டுள்ளன.
- ✶ பெண்ணுருவங்கள் முகில்களில் இருந்து வெளிப்படுவது போல வரையப்பட்டுள்ளது.

(4 புள்ளிகள்)

(ii) ஹந்தலாகல ஓவியங்களின் பண்புகள் சிகிரிய ஓவியப் பண்புகள் காணப்படுகின்றது.
சிகிரியாவில் அதிகமாக பயன்படுத்தப்பட்ட வர்ணங்களே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
சிகிரியாவில் காணப்படும் ஓவியங்கள் லௌகீக தன்மையை வெளிப்படுத்தும் பெண்ணுருவங்கள் ஹந்தலாகல ஓவியங்கள் பௌத்த சமயம் சார்ந்தவை.
தபசு பல்லுகா வியாபாரிகள் புத்தருக்கு தானம் வழங்கும் காட்சி, புத்தரை வணங்கும் தேவர்கள் ஆகிய சித்திரங்கள் இங்கு காணப்படுகின்றது.

(iii) திவங்காலய ஓவியங்களில் சிகிரிய ஓவியப் பண்புகள் காணப்படுகின்றது.
ஆனால் திவங்காலய ஓவியங்கள் மதச்சார்பானவை ஆகும்.
மகாயாள பௌத்த எண்ணக்கரு வெளிப்படுத்தும் பௌத்த விடயங்கள் இங்கு சிகிரியப் பாணியில் வரையப்பட்டுள்ளது.
இங்கு வரையப்பட்டுள்ள தெய்வ அழைப்பு, தங்க ஏணி மூலம் சங்கிஸ்த புரத்திற்கு வருதல் ஆகியன இதற்கு உதாரணமாகும்.

02)

(i) வேளித்தள்ளிய தூண் அமைப்பு
தூண்களிற்கிடையில் விமான அமைப்பு
கருவறை, அர்த்தமண்டபம். வெளிமண்டபம் என்ற மூன்று பகுதி
கிஞ்சிகாமுறை கூரையமைப்பு (4 புள்ளிகள்)

(ii) மலர் கொடி – வியபத்த, தாமரைமலர், பினரமலர்.
உயிரற்றவை – கயிறுமுடிச்சு, அரும்பு, குந்திரிக்கம்.
பிராணி – பேருண்டபக்ஷி, செறப்பெண்டியா, ரிஷபகுஞ்சரம், அன்னபந்தம்.
வாழ்க்கைத் தகவல் – குழந்தைக்குப் பால் ஊட்டும் தாய், மல்யுத்தவீரர், நடனமாது, போர்வீரன், றபான் அடிப்போன். (6 புள்ளிகள்)

(iii)
- இக் காலத்தில் உருவாக்கப்பட்ட கடலதெனிய விகாரை தென் இந்திய கட்டிடக் கலை அமைப்பில் கட்டப்பட்டதாகும்.
- இதன் பிரதான கட்டிடமான சிலைமனை முழுமையாக இந்து சமயக் கோவில் வடிவ திட்டமைப்பை மாதிரியாகக் கொண்டு நிருமாணிக்கப்பட்டுள்ளது.
- இது 1ஆம் மண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பக்கிரகம் என மூன்று அங்கங்களைக் கொண்டுள்ளது. பிரதான பகுதியான கர்ப்பக் கிரத்தினுள்ளே வஜிராசனப் பீடத்தில் அமர்ந்து உள்ள புத்தர்சிலை காணப்படும்.
- கடதெனிய விகாரையின் அன்மையில் அமைந்துள்ள "விஜய உத்பாய" எனப்படும் கட்டடம், இந்து கட்டட அமைப்பிற்கு பதிலாக பௌத்த அமைப்பின் வெளிப்பாட்டை அளிப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியாகும். இது கடலதெனிய விகாரைக்கே உரித்தான விஷேச அமைப்பாகும். நான்குபக்கமும் சிறிய சைத்தியங்கள் நான்கும், மத்தியில் தூண்கள் மேல் அமைக்கப்பட்ட கூரையின் கீழ் ஓர் அளவில் பெரிய சைத்தியம் ஒன்றுள்ளது. இதன் நான்கு திசைகளிலும் சிறு அறை அமைத்து அதனுள்ளே புத்தர் சிலை வைக்கப்பட்டு உள்ளன. இதனால் இந்துசமயக் கட்டிடக் கலைப் பண்பினிடையே உருவாக்கப்பட்ட கடலதெனிய விகாரைக்கு பௌத்த இயல்பு இணைக்கப்பட்டுள்ளன. (10 புள்ளிகள்)

03)

(i) கோயில் சிற்பங்கள் - உதாரணம் மகிசா வர்த்தினி வதம், திறந்த வெளிபாறைச் சிற்பங்கள் - கங்கையில் இறக்கம் (4 புள்ளிகள்)

(ii)
- ✶ இங்கு 5 கோயில்கள் காணப்படுகின்றது.
- ✶ ஒரு பாறையில் திரௌபதை, அர்சுனரன், தர்மன், வீமன் ஆகியோர்களது 4 கோயில் காணப்படுகிறது.
- ✶ மற்றய பாறையில் நகுல சகாதேவ கோயில் அமைக்கப்பட்டுள்ளது.
- ✶ இவை பாறையை உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் குடைந்து செதுக்கி அமைக்கப் பட்டுள்ளது.
- ✶ இவை பொதுவாக இரத வடிவமானவை.
- ✶ வீமராச ரதப் பிரமாண்டமானதாவும், ஒடிந்த வில்வளைவு கூரையமைப்பைக் கொண்டுள்ளது.
- ✶ இக்கோயில்களில் பௌத்த விகாரை, சைத்தியபாணிகள் காணப்படுகிறது.

(iii)
- ✶ பல்லவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட கற்களை அறுத்து, பொளிந்து கோயில் கட்டும் முறையான கற்றளி முறையே பிற்காலத்தில் சோழர்கள் மிகப்பெரிய கோயில்களை அமைக்க உதவியது.
- ✶ இதற்கு சிறந்த உதாரணம் தஞ்சைப் பெரிய கோயிலாகும்.
- ✶ இது 90 அடி உயரமான கோபுரத்தை கொண்டது.
- ✶ கோபுரத்தின் உச்சியில் வட்டவடிவான கற்சிகரம் காணப்படுகிறது.
- ✶ மகா மண்டபம், இடைமண்டபம், கருவறை என்ற மூன்று பகுதிகளை கொண்டது.
- ✶ கருவறையில் பிரமாண்டமான சிவலிங்கம் காணப்படுகிறது.
- ✶ தூண்கள் செதுக்கல் வேலைப்பாடு கொண்டதாக காணப்படுகிறது. (10 புள்ளிகள்)

**04)**

(i)
- சித்திரத்தின் கரையை மலர்கொடி அலங்காரங்களால் அலங்கரித்தல்
- சிறியபிரமானச் சித்திரத்தில் நிகழ்ச்சியைச் சித்தரித்தல்
- பிரகாசமான வர்ணச்சாயல்களும் மென்மையான இரேகைப் பயன்பாடும்
- மேலிருந்து பார்க்கும் தன்மையில் தூரதரிசனமுறை பின்பற்றி இருத்தல்
- பக்கத் தோற்றப்பாட்டில் முகமும் பாதமும் வரையப்பட்டிருத்தல்
- உரிய நிகழ்ச்சிக்கு மேலதிகமாக சூழலைச் சிறப்பாகச் சித்தரித்திருத்தல் (4 புள்ளிகள்)

(ii)
- அரசகலை நிறுவகம் உருவாக்கப்பட்டமை.
- உமாயனின் கல்லறையை நிருமாணித்தது.
- ஜேயன்பூர் நகரத்தை நிருமாணித்தமை
- அரசகலை நிறுவகத்தில் இருந்த கலைஞர்களின் திறமைகளைத் தனித்தனியாக இனங்கண்டு கொள்ளல்.
- அவர்களுக்கு அரச அனுசரனையை வழங்கல்.
- உயர் நிருமாணப்பை செய்த கலைஞர்களுக்கு பண உதவியை வழங்குதல்
- இன மதபேதமின்றி சிறந்த கலைஞர்களுக்கு பாரசீகத்திற்கு அனுப்பி ஓவியம் பயிற்று வித்தமை
- "ஆயத்தன" என்ற நுண்கலைக் கல்லூரியை ஸ்தாபித்தமை
- அரசதலைவர்களின் சித்திரங்கள் அடங்கிய"அக்பர் நாம"என்ற நூல் வெளியிடப்பட்டமை
- சித்திரத்திற்காக கடதாசியை பாரசீகத்தில் இருந்து வருவித்தமை (6 புள்ளிகள்)

(iii)
- மொகல் :- மோகல் சித்திரக் கலைக்குதொனிப் பொருளாக அமைவன இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்ட மோகல் அரச குடும்பத்தவர்களின் பிரதானிகளின் மார்பளவு வடிவை வரைவதே பெரும்பாலும் நிகழ்ந்தன. சாதாரண மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் மோகல் சித்திரங்களுக்கு தொனிப்பொருளாக பெறப்படவில்லை. அரச குடும்ப நிகழ்வுகள், அரசன் விரும்பும் வேட்டைக் காட்சியும், இயற்கைக் காட்சியும், மோகல் சித்திரங்களுக்கு தொனிப்பொருளாகக் கொள்ளப்பட்டன.
- ராஜ்புட் கலைஞர் மோகல் கலைஞரிலும் பார்க்கமிகப் பரந்ததொனிப் பொருட்களின் கீழ் சித்திரங்கள் வரைந்துள்ளனர். இந்து இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட சிருங்கார செய்திகள், கிராமிய மக்களின் வாழ்க்கை, காதல் போன்ற எண்ணக்கருக்கள் இராஜ்புட் சித்திரங்களுக்கு தொனிப்பொருட்களாக அமைந்தன. இராகமாளிகை என்னும் பெயரில் பல சித்திரங்களும் இவற்றிடையே உள்ளன. இராஜ்புட் சித்திரக்கலை இந்துக்கலைச் சம்பிரதாயம் எனப் பேணப்பட்டன. விசேஷமாக அவர்களது பிரதான தலைப்புக்களாக அமைந்தவை இந்து இலக்கிய ஆக்கங்களாகும்.
- மொகல் சித்திரக் கலையில் பாரசீக செல்வாக்கு காணப்படுகிறது
- ராஜ்புட் சித்திரக் கலையில் பண்டைய இந்திய ஓவியக் கலையின் செல்வாக்கு காணப்படுகிறது
- பொண் நிறம் பயன்படுத்தல், பிராணிகளின் வடிவத்திற்கு முக்கியமளித்தல் போன்றன இரண்டு மரபிற்கும் பொதுவானதாகும். (10 புள்ளிகள்)

**05)**

(i) கிரேக்க மேன்மைக்கால சிற்பங்கள் நான்கு தருக.
பரிதிவட்டம் வீசுபவன்
கோ்மிஸ்சும் டயோனியசும்
அதினா
இருக்கின்ற குத்துச் சண்டைவீரன்
ஈட்டி எறிபவன் (4 புள்ளிகள்)

(ii) உரோமர்கள் தமது போர் வெற்றிகளை நினைவு கூர்வதற்காகக் கட்டிய வெற்றித் தூண்கள், வெற்றி வளைவுகள் என்பன அவர்களின் மதிப்புமிக்க அமைப்புகளாகும். அவற்றினைப் பற்றிச் சுருக்கமாக குறிப்பிட வேண்டும். (6 புள்ளிகள்)

(iii)
- ஒகஸ்ரஸ்சிலை - பொம்பை (Pompey)
- யூலியஸ் சீசரின் தலைப் பகுதி – வெஸ்பேசியன்
- கறகலாசிலை – மாக்கஸ் ஒருளியஸ்
- ரஜன்சிலை

**ஒகஸ்ரஸ் சக்கரவர்த்தியின் சிலை**

- ❖ இச்சிலை தற்போது வத்திக்கானிலுள்ள தொல்பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டுள்ளது.
- ❖ உரோமச் சிலைகளில் கிரேக்ககலைப் பண்புகள் காணப்பட்டபோதிலும் விபரத்துடன் கூடிய அமைப்புக்கள் அதிகம் காணக்கூடியதாக உள்ளது.
- ❖ ஒகஸ்ரரின் சிலையில் அவருடைய குணப்பண்புகள் காணப்பட்ட போதிலும் இது முழுமையான உருவமாகும்.
- ❖ ஒகஸ்ரரின் சிலை இலகுவான அசைவுடன் காணப்படுகின்றது. அவரின் கையில் அரச யஸ்டி (ஈட்டி)யும் காணப்படுகிறது.
- ❖ ஆடை, அமைப்பு இயற்கைத் தன்மையுடன் காணப்படுகிறது

**கறகலாசக்கரவர்த்தியின் சிலை.**

- ❖ இது உரோமானிய மார்பளவுடைய சிலையாகும்.
- ❖ கம்பீரமான மனிதராக, புத்திமானாக, தைரியசாலியான இயல்புகள் கிரேக்க சிலையிலும் பார்க்க விளக்கமாக வெளிக்காட்டுவதற்கு உரோமக் கலைஞர் முயற்சித்துள்ளனர்.
- ❖ அதிகமான கிரேக்கச் சிலைகளில் காணப்படும் மென்மைத் தன்மை இதில் காணப்படாவிடினும், உருவத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள, நாசி, தாடி போன்ற பகுதிகளால் கம்பீரத்தன்மை, வீரம், என்பன சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.
- ❖ உரிய சரிதையின் பண்புகளை அம்மனிதரின் ஆளுமை வயது தனிநபர் வேறுபாடு ஆகிய தன்மை வெளிப்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.
- ❖ மனிதர் உயிருடன் இருக்கும் காலத்தில் இச்சிலை செய்யப்பட்டமையால் அவற்றின் உண்மைத்தன்மை அதேபோன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (10 புள்ளிகள்)

06)

(i)

- இைசாந்தியக் கலையில் மொசாய்க்கலை பிரதான இடத்தை வகித்தது.
- இம்மரபில் அரச வம்சவத்தவரின் தலைக்கு பின்புறம் ஒளிவட்டம் காட்டப்பட்டமை.
- இம்மரபில் ஒளிவீசுகின்ற பிரகாசமான அம்சம் கொண்டதாகக் காணப்படுகின்றது.
- இம்மரபில் எகிப்திய சித்திரங்களில் காணப்படும் பண்புகள் காணப்படுகின்றது.

(4 புள்ளிகள்)

(ii) மொசாய்க் சித்திரம் என்பது வர்ணக் கண்ணாடித் துண்டுகளை சுதையின் மீது ஒட்டி ஆக்கப்படும் கலை நிர்மாணமாகும். இதற்கு
பலவர்ண சிறிய கண்ணாடித் துண்டுகள் (ஒளிவீசுகின்ற) மினுங்குகின்ற துண்டுகளை (டெசரி) போன்றவற்றை கலைஞர்கள் பயன்படுத்தி இருக்கின்றார்கள்.
இது ஒளி வீசுகின்ற பிரகாசமான அம்சம் கொண்டதாகக் காணப்படுகின்றது. (6 புள்ளிகள்)

(iii)

- SANVITALE சன்விட்டல் தேவாலயத்திலுள்ளே அரசர்களின் மொசாய்க் சித்திரம் பலவும் காணக்கூடியதாக உள்ளது. இது விசேட கௌரவத்துடன் விசேடமான ஒன்றை காண்பிப்பதற்காக கலைஞர்களால் இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- "தியடோராராணியும், பணியாளர்களும்" என்ற மிகவும் பிரபல்யமான படைப்பொன்று இத்தேவாலயத்தில் உள்ளது. இதில் எளிமையான வடிவமைப்பும், நேரான உடல்வாகும் கொண்டு காணப்படுகின்றது.
- பூசை செய்வதற்கு தங்கத்திலான பாத்திரம் பெண்களின் கைகளில் காணப்படுகின்றது.
- பெண்களின் உடைகளில் காட்டப்படுகின்ற உடைமடிப்புக்கள் கூட கண்ணாடிதுண்டுகளால் இயற்கைத் தன்மையாக செய்யப்பபட்டுள்ளது.
- எல்லா பெண்களும் நீண்ட பெரிய ஆடைகளால் அலங்கரித்து இருப்பதோடு தியடோரா ராணியின் அரசகுலத்தை காட்டுவதற்கு தலையைச் சுற்றி ஒளிவளையம் அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இப்படைப்புக்களில் உயிர்த்துடிப்புடன் கூடிய விசித்தரமான அழகைக் காணக்கூடியதாக உள்ளது. (10 புள்ளிகள்)